1973 நவம்பர் 19]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தமிழக அரசு ரூ. 2.50 லட்சம் மதிப்பில் சேப்பாக்கத்தில் அமைந்துள்ள அரசு அலுவலகங்களில் சிற்றுண்டி அறைகள், கழிப்பிடங்கள் மற்றும் மிதி வண்டிகள் வைப்பதற்கான கொட்டகைகள் கட்டுவதற்காக ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இதற்கான விரிவான மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது. 1974 ஏப்ரல் மாதத்தில் வேலை துவங்கப்படவிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, செகரட்டரியேட்டிலே பணியாற்றுகின்ற ஊழியர்கள்கூட டிபன் சாப்பிடுவதற்கு இடம் இல்லாமல் ஆங்காங்கே உள்ள ரோடு ஓரங்களிலே சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கும் டிபன் சாப்பிடுவதற்குத் தனியான இடம் ஏற்படுத்தித் தருவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, போர்டு ஆபீஸ் பற்றித்தான் கேள்வி. அங்கத்தினர் அவர்கள் கூறுவதுபற்றித் தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

Sharing of water from Neyyaru.

* 166 *Q.*—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state the details of the agreement reached between the Governments of Tamil Nadu and Kerala in regard to the sharing of Neyyar Waters?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நெய்யாறு பாசனத் திட்ட அமைப்பிலிருந்து தண்ணீர் வழங்குவதை முறைப்படுத்துவதற்காகக் கேரள அரசு அனுப்பியுள்ள உத்தேச விதிகளின்கீழ் கேரள அரசு தமிழ் நாட்டுக்கு வினாடிக்கு 150 கன அடி தண்ணீர் வழங்கும். எனினும், தண்ணீர் வழங்குவதை முறைப்படுத்துவதற்கு விதிகள் இயற்றினால் மட்டும் போதாது என்றும் இரு மாநிலங்களுக்கு இடையே முறையான ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்படவேண்டும் என்றும் இந்த அரசு கருதியுள்ளது. ஒப்பந்த வரைவு ஒன்றும் கேரள அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்த அரசின் இசைவு எதிர்பார்க்கப்படுகிறது.

Thiru N. DENNIS: **May I know, Sir, whether our State is getting full quantity of water as per the original terms of agreement with the Kerala Government? If not, the reasons for the same may be indicated.**

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி நமக்கு அவர்கள் 150 க்யூசெக்ஸ் தண்ணீர் கொடுக்கவேண்டும். ஆனால் அவர்கள் 115 க்யூசெக்ஸ் தண்ணீர்தான் கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். கீழே எவ்வளவு நீர் வருகிறது என்ற கணக்கைப் பார்க்கின்றபொழுது 72 கியூசெக்ஸ்தான் வருகிறது என்று கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அரசுக்குத் தெரிவித்து இருக்கிறார்கள். எனவே, இதுகுறித்து கேரள அரசுக்கு நாம் எழுதியிருக்கிறோம். அவர்களுடைய பதிலை எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அவர்கள் நமக்குத் தண்ணீர் 150 க்யூசெக்ஸ் தருவதாகச் சொல்லியிருந்தும் இப்பொழுது—அதற்காகப் பணமும் வாங்கியிருக்கிறார்கள்—நமக்கு 72 க்யூசெக்ஸ் அளவுக்குத்தான் தண்ணீர் கொடுக்கிறார்கள் என்று கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். அந்த மாவட்டத்தில் பல பகுதிகளிலே தண்ணீர் பாசனத்திற்குச் சரியாகக் கிடைக்கவில்லை. அங்கேயுள்ள விவசாயிகள் எல்லாம் தண்ணீர் கிடைக்காமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, உடனடியாக இது குறித்து இரண்டு அரசாங்கங்களும் அமைச்சர்கள் அளவிலே பேச்சுவார்த்தை நடத்திட அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, கேரள அரசோடு மற்ற நீர் பங்கீடு பிரச்சினைகளைப்பற்றி பேச்சு வார்த்தை நடத்தும்பொழுது இதுபற்றியும் பேச்சுவார்த்தை நடத்தலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, நெய்யாறு நீர்ப் பாசன சேனலுக்குத் தண்ணீர் தருவதாகக் கேரள அரசாங்கம் சொல்லி, நமக்குத் தேவைப்படுகின்ற பொழுது தண்ணீர் கொடுப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் நமக்குத் தேவைப்படுகின்றபோது தண்ணீர் திறந்துவிடாததால் கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே இன்றைய நிலையில் பல ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, நமக்குத் தேவையானபொழுது தண்ணீர் திறந்து விடக்கூடிய ஏற்பாட்டை அரசு செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அதற்காகத்தான் கேரள அரசு சில விதிமுறைகளை வகுத்து இருக்கிறது. நாம் சொல்கிறோம், அது மட்டும் போதாது என்று. எனவே, அதற்காக ஒரு ஒப்பந்த வரைவை நாம் அவர்களுக்கு அனுப்பியிருக்கிறோம். விரைவிலே அதற்குப் பதில் வரும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.